# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : DW-2 | Date | : 18.02.2026 |
| Case No. | : **O.S.** 166/2019 | Nationality | : Indian |
| Name | : அழகர் | Religion | : |
| Father's/Husband's Name | : சாமிநாதன் | Age | : 42 |
| Village | :அம்மன்பேட்டை, வேப்பத்தூர்-1 | | |
| Taluk | : திருவிடைமருதூர் | | |

பி.சா.2

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை தொடாச்சி :-**

நான் வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். ஏற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்து ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன் . இன்று கூடுதல் ஆவணமாக முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நானும் எனது தாயாரும் பிரதிவாதிகளும் சேர்ந்து 1வது ஷெட்யூலில் பகுதி சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி வாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண் 200/2024 பிராது சான்றிட்ட நகலை **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு கடந்த 2016 ம் ஆண்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு 1வது இன சொத்தை எனது பாட்டனார் அனுபவித்தில் இருந்தது என்பதை காட்ட ஆவணம் உண்டா என்றால் இல்லை. ஆனால் அனுபவித்தில் உள்ளோம். பழைய சர்வே எண் 130/14 என்பது நத்தம் சொத்து அதற்கான புதிய புல எண் 130/44 எங்களுக்கு சொந்தமானது. மேற்படி சொத்து அரசாங்கத்தால் எங்கள் அப்பா சாமிநாதன் பெயருக்கு பட்டா

வழங்கப்பட்டது. 130/44 புல எண்ணிற்கான எனது தகப்பனார் சாமிநாதன் பெயருக்கு ஏற்பட்ட பட்டாவில் எந்த குழப்பமும் இல்லை என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் பெயர் சாமிநாதன் என்றால் சரிதான். 130/16 ல் புல எண்ணிற்கு வாதியின் தகப்பனார் சாமிநாதன் பெயருக்கு ஏற்பட்ட பட்டா என்றால் சரியல்ல. சாமிநாதனின் மகன் ஜெயராமன், குணசேகரன் ஆகியோர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணையில் பாரா 6 ல் எனது தகப்பனார் பெயர் சாமிநாதன் என்பதையும் வாதியின் தகப்பனார் சாமிநாதன் என்பதாலும் தவறுதலாக யுடிஆர் திட்டத்தின் கீழ் 1987 ல் வாதியின் தகப்பனார் சாமிநாதன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகளின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்ட விவரம் வாதி வழக்கு தாக்கல் செய்து அழைப்பாணை பெறப்பட்ட பின்புதான் தெரியும். பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டது சம்மந்தமாக மனு செய்தேனா என்றால் மனு செய்தேன். மாவட்ட ஆட்சியரிடம் நான் செய்த மனு கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டு கோட்டாட்சியரின் விசாரணைக்கு பிறகு வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வட்டாட்சியர் இந்த வழக்கில் தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்திவிட்டார். நான் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை. விசாரணை அறிக்கை எனக்கு வழங்கப்படாததால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. நான் சொல்வதுபோல் மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்யவில்லை என்றாலும் அதனால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புல எண் 130/16 எங்கள் குடும்பத்தார் பெயரில் உள்ளது என்பதற்கு பட்டா சிட்டா உள்ளதா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பிறகு கூட எனது

தாயார் தன்னை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு கொடுக்கவில்ல என்றால் சரிதான். எனது தாயார் கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நானும் எனது சகோதரர்களும் அதில் தரப்பினராக உள்ளோம். அந்த வழக்கு கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. பிவாசாஆ 6 பிராது நகலில் பாரா எண் 4 ல் எனது தகப்பனார் பெயர் சாமிநாதன் என்பதையும் வாதியின் தகப்பனார் சாமிநாதன் என்பதாலும் தவறுதலாக யுடிஆர் திட்டத்தின் கீழ் 1987 ல் வாதியின் தகப்பனார் சாமிநாதன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புல எண் 130/16 ல் எனக்கு முழு விஸ்தீரணமும் சொந்தமில்லை. சுமார் பாதி விஸ்தீரணம் மட்டும் சொந்தம். பிராதில் பக்கம் 5 ல் பாரா 12 ல் தாவா சொத்து வாதிகளுக்கு முழு சொந்தம் என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் புல எண் 130/16 ல் 0.01.25 ஏர்ஸ் என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சொத்து விபரத்தில் காட்டப்பட்டுள்ளது மேற்படி புல எண் 130/16 ல் 0.01.25 ஏர்ஸ் சொந்தம் என்று பரிகாரம் கோரியுள்ளோம். பிவாசாஆ 6 பிராது வழக்கு மூலம் பெயர் குழம்பதான் காரணம் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மத்திய அரசின் சுகாதார திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவறைக்கு மானியம் பெற்று கழிவறை கட்டப்பட்டது எந்த சொத்தில் உள்ளது என்றால் புல எண் 130/16 ல் கட்டப்பட்டுள்ளது. மத்திய அரசின் மானியம் பெய வேண்டும் என்றால் சொத்தின் உரிமையாளர் பெயர் ஆவணங்களில் இருக்க வேண்டும் என்றால் சரிதான். எங்களது அனுபவம் குறித்து கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மானியம் பெற்றோம். நான் சொல்வதுபோல் மானியம் பெற முடியாது என்றாலும் புல எண் 130/44 பட்டாவின் அடிப்படையில் மேற்படி புல எண்ணிற்குதான் மானியம் பெற்றோம் என்றாலும் மேற்படி புல எண்ணில்தான் கழிவறை கட்டிடம் உள்ளது என்றாலும் சரியல்ல. 13.06.2019 ம் தேதி

வாதிக்கு எதிராக புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று நான் சொல்லியுள்ளது எந்த காவல் நிலையத்தில் என்றால் திருவிடைமருதூர் காவல் நிலையத்தில். நான் சொல்வதுபோல் பூவரசு மரத்தை வெட்டி அந்த இடத்தில் வைக்கோல் போர் வைக்க வாதிகள் முயற்சி செய்த பூவரசு மரத்தின் கிளைகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் அரசியில் கட்சியில் உள்ளேன் என்றால் சரிதான். போலிசார் எனக்கு பழக்கம் உண்டு என்றால் சாதாரணமாக சென்று வருவதுதான் தனிப்பட்ட பழக்கம் இல்லை. நான் கொடுத்த புகாருக்கு பதிலாக வாதியும் எனக்கு எதிராக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாக வழக்கு போட்டார் என்றால் சரியல்ல பூவரசு கிளையை நாங்கள் வெட்டியதாக புகார் கொடுத்துள்ளார். தாவா சொத்தில் நானும் எனது தாயாரும் எனது சகோதரர்களும் எனது பாட்டனார்களும் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும் வாதிகளுக்கு சொந்தமான புல எண்130/16 சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய நாங்கள் முயற்சித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தில்தான் உள்ளது. இந்த வழக்கில் எதிரிடை பாத்தியம் கோரி தனியாக நானும் எனது குடும்பத்தாரும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனியாக வழக்கு போட்டுள்ளோம். தாவா 130/16 சொத்தைப் பொறுத்து எனக்கு சுவாதீனமும் அனுபவமும் இல்லை என்பதால்தான் எதிரிடை பாத்தியம் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா புல எண் 130/16 ல் வாதிகள் வைக்கோல் போர், மாட்டு கொட்டகை, கழிவறை வைத்துள்ளார் என்றால் எங்களுக்கு அனுபவத்தில் உள்ள 1.25 ஏர்சில் வைக்கவில்லை அவருக்கு சொந்தமான 1.25 ஏர்சில் வைத்துள்ளார். எனக்கு புல எண் 130/16 ல் 1.25 ஏர்ஸ் சொந்தமில்லை என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் உள்ள வைக்கோல் போர், மாட்டு கொட்டகை, கழிவறை அனைத்தும் புல எண் 130/44 ல் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விவரம் தெரிந்து நான்

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிப்பது எனது குடும்பத்தாருக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன். எனது சகோதரருக்கும் தாயாருக்கும் சேர்த்து வழக்கு நடத்த தனியாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எதிர் வழக்குரையிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் எனக்காகவும் மற்ற பிரதிவாதிகளுக்காகவும் எதிர் வழக்குரை தாக்கல் செய்து ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மற்ற பிரதிவாதிகளுக்கு சேர்த்து சாட்சியம் அளிக்க இயலாது என்றாலும் அதனால் எனது சாட்சியம் ஏற்ககத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கு தாவா சொத்திற்கு தொடர்புடையதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).